பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
22 11 2025 12 40
சனிக்கிழமை நண்பகல்
ஆகாஷவாணி செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. ஜி20 உச்சிமாநாடு இன்று ஜோஹன்னஸ்பர்கில் தொடங்குகிறது.

2. தொழிலாளர் நலனுக்கான நான்கு சட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்துள்ளது அவர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்யும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. கோவாவில் நடைபெற்று வரும் சர்வதேச திரைப்பட விழாவில் 50 க்கும் மேற்பட்ட பெண் இயக்குநர்களின் திரைப்படங்கள் இன்று திரையிடப்படுகின்றன.

4. வியட்நாமில் மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளது.

5. மாற்றுத் திறனாளிகளுக்கான உலக விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் சந்தீப் குமார் தங்கப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

ஜி20 உச்சிமாநாடு தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்கில் இன்று தொடங்குகிறது.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி அந்நாட்டு தொழில்துறையை சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடினார்.

சமூக வலைதளத்தில் இதுகுறித்த புகைப்படங்களை வெளியிட்டுள்ள பிரதமர், இந்தியாவில் முதலீடு செய்வதற்கான உகந்த சூழல் நிலவுவதாக அவர்கள் குறிப்பிட்டதாக கூறியுள்ளார்.

தென்னாப்பிரிக்காவின் கிர்மிட்டியா பாடலுடன் கங்கா மையா நிகழ்ச்சியை கண்டது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் தமிழில் பதிவிட்டுள்ளார்.

தமிழில் இந்த பாடல் பாடப்பட்டது இந்த நிகழ்ச்சியின் சிறப்பம்சம் ஆகும் என்று கூறியுள்ள திரு நரேந்திர மோடி, அது தொடர்பான காணொலியையும் பகிர்ந்துள்ளார்.

(சவுண்ட் பைட் – பாடல் - 28 செகண்ட்ஸ்)

>><><><><><<

தொழிலாளர் நலனுக்கான ஒருங்கிணைந்த நான்கு சட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்துள்ளது அவர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்யும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், தொழிலாளர்களின் நலன்களை காப்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளதை இது எடுத்துரைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மகிளிர், இளையோர், அமைப்புசாரா மற்றும் இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் உணவுபொருட்கள் விநியோகிப்பவர்கள் இதன் மூலம் பயனடைவார்கள் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

>><><><><<

பாரத ரத்னா சர்தார் வல்லபாய் பட்டேலின் 150 ஆவது பிறந்த தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இன்று புதுதில்லியில் ஒற்றுமை யாத்திரையை மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், இதுபோன்று நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க இளையோருக்கு உத்வேகம் அளிக்க இதுபோன்ற நிகழ்ச்சிகள் உதவிடும் என்றும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

>><><><><<

இயற்கை பேரிடரால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த் ராய் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இயற்கை பேரிடர் பாதிப்பு குறைப்பு தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் இயற்கை பேரிடர் பாதிப்புகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளை தொலைநோக்கு அடிப்படையில் மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பேரிடர்களை எதிர்கொள்வதற்கான கட்டுமானங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் திரு நித்யானந்த் ராய் கூறினார்.

>><><><><><<

அடுத்த ஆண்டு ஹஜ் புனித பயணத்திற்கான ஏற்பாடுகளை ஆய்வு செய்வதற்கான மாநாடு தற்போது மும்பையில் நடைபெற்று வருகிறது.

மத்திய சிறுபான்மையினர் நலத்துறை செயலர் டாக்டர் சந்திரசேகர குமார் தலைமையில் நடைபெற்று வரும் இந்த மாநாட்டில், மாநிலங்களின் ஹஜ் குழு நிர்வாகிகள் பங்கேற்றுள்ளனர்.

>><><><><><<

தலைமைத் தேர்தல் ஆணையர் தொடர்பான போலி காணொலியை வெளியிட்டது தொடர்பாக கேரள காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

திருவனந்தபுரத்தில் உள்ள இணைய குற்றங்கள் தடுப்புப் பிரிவு இந்த வழக்கினை பதிவு செய்துள்ளதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக சமூக வலைதளத்தில் இந்த போலி காணொலி வெளியிடப்பட்டதாகவும் காவல்துறையினர் கூறினர்.

>><><><><><<

மகாராஷ்டிரா உள்ளாட்சித் தேர்தலில் பிஜேபியைச் சேர்ந்த 100 பேர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மும்பையில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அம்மாநில பிஜேபி தலைவர் திரு ரவீந்திர சவான், மூன்று நகராட்சித் தலைவர்களும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமைக்கு கிடைத்த அங்கீகாரம் இது என்றும் திரு ரவீந்திர சவான் தெரிவித்தார்.

>><><><><><<

இனி சர்வதேச திரைப்பட விழா குறித்த செய்திகள்...

*(சவுண்ட் பைட் – Opening Music – 8 செகண்ட்ஸ்)*

கோவாவில் நடைபெற்று வரும் சர்வதேச திரைப்பட விழாவின் மூன்றாம் நாளான இன்று *Valentine Bertani* மற்றும் *Nicole Bertani* இயக்கிய இத்தாலி திரைப்படம் *Mosquitos*-ம் *Jafar Panahi* இயக்கிய *It was just an accident* திரைப்படமும் திரையிடப்படவுள்ளன.

அசாம் திரைப்படம் *Sikaar* மற்றும் சூரிய பாலகிருஷ்ணன் இயக்கிய *Deepa Didi* ஆகிய திரைப்படங்களும் இன்று திரையிடப்படவுள்ளன.

மகளிர் திறனை எடுத்துரைக்கும் வகையில் 50-க்கும் மேற்பட்ட பெண் இயக்குநர்கள் இயக்கிய திரைப்படங்களும் இன்று திரையிடப்படவுள்ளன.

இதில் *Simple Dugar*-ன் *Lokmata Devi Ahilyabai* திரைப்படமும் இடம்பெறுகிறது.

இந்த திரைப்பட விழாவின் ஒரு பகுதியாக பல்வேறு இயக்குநர்கள் தங்கள் அனுபவங்களை எடுத்துரைக்கும் நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

திரைப்பட விழாவின் இயக்குநர் சேகர் கபூர் பங்கேற்கும் கலந்துரையாடல் நிகழ்ச்சியும் இன்று முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

கோவா சர்வதேச திரைப்பட விழா, திரைத்துறையினரின் கவனத்தை ஈர்த்து வருகிறது.

*(சவுண்ட் பைட் – Closing Music – 8 செகண்ட்ஸ்)*

>><><><><<

ஜம்மு கஷ்மீரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பணி நாட்களின் எண்ணிக்கை 150 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகானுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாக ஜம்மு கஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம பஞ்சாயத்துகள் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகள் என அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இதற்கென சிறப்பு நிதியுதவி தொகுப்பினை வழங்குமாறு மத்திய அரசினை வலியுறுத்தியுள்ளதாகவும் திரு மனோஜ் சின்ஹா அதில் குறிப்பிட்டுள்ளார்.

>><><><><<

வியட்நாமில் மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கானோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு இருப்பதாக அந்நாட்டு அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

அப்பகுதிகளில் மீட்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்வேறு குடியிருப்புப் பகுதிகளில் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டு இருப்பதாகவும், இதனை சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

## <u>விளையாட்டுச் செய்திகள்</u>

மாற்றுத் திறனாளிகளுக்கான உலக விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் சந்தீப் குமார் தங்கப்பதக்கம் வென்றார்.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் துப்பாக்கிச் சுடும் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

மகளிர் துப்பாக்கிச்சுடும் பிரிவில் Pavani Banot வெண்கலப் பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 12 தங்கம், 21 வெள்ளி, 18 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

>><><><><<

Deaflimpic போட்டியில் இந்தியாவின் Mahith Sandhu தங்கப்பதக்கம் வென்றார்.

ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 50 மீட்டர் துப்பாக்கிச்சுடும் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 6 தங்கம், 6 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் ஆறாவது இடத்தில் உள்ளது.

>><><><><<

ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் 17-21, 24-12, 21-16 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Chou Tien Chen -ஐ வென்றார்.

>><><><><<

சர்வதேச இணைய செஸ் போட்டியில் இந்தியாவின் பிரனேஷ் தங்கப்பதக்கம் வென்றார்.

>><><><><<

உலகக் கோப்பை ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியா-ஏ அணி காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மஸ்கட்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் லீக் ஆட்டங்களில் இந்தியா ஏ அணி, ஐக்கிய அரபு எமிரேட் மற்றும் ஆப்கானிஸ்தானை வென்றது.

>><><><><<

இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று குவஹாத்தியில் தொடங்கியது.

இதில் டாஸ் வென்று முதலில் பேட் செய்து வரும் தென்னாப்பிரிக்கா அணி சற்றுமுன்வரை முதல் இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 132 ரன் எடுத்துள்ளது.

>><<